# எட்டுத்தொகையில் மருத்துவம்

*திருமதி மு. தேன்மொழி*
கௌவுரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783385

**ஆய்வுச்சுருக்கம்**

*மிகவும் தொன்மையான இலக்கியம் சங்க இலக்கியம் எனலாம். அவ்விலக்கியத்தில் முதலிடம் பிடிக்கும் எட்டுத்தொகை, இலக்கிய மாந்தர்களின் உணவு முறைகளை ஆராயும்போது அத்தனையும் உடலைப் பேணிக்காக்கும் மருத்துவம் சார்ந்த உணவுகளாகவே இருந்தன. இன்று அறிவியல் கண்டுபிடிப்புகளில் முன்னேறியுள்ள உணவுகளின் பட்டியலை ஒரு கணம் திரும்பிப் பார்க்குமம் பொது அவை அத்தனையும் எட்டுத்தொகை மாந்தர்கள் உண்ட உணவாகவே உள்ளன. எனவே நம் முன்னோர்கள் சிறந்த மருத்துவராகவும, இன்றையக்கால சித்த மருத்துவர்களுக்கு முன்னுதாரனமாகவும் விளங்குகின்றனர் என்பதை இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.*
***கலைச்சொற்கள்:*** *எட்டுத்தொகை, மருத்துவம்.*

**முன்னுரை**

*தமிழ் மொழியில் சங்க காலம், முதல் இக்காலம் வரை பல இலக்கியங்கள் காணப்படுகின்றன. இந்நூல்களில் பல இடங்களில் உடல் நலத்தை பேணிக்காக்ககூடிய மருத்துவச் செய்திகள் காணப்படுகின்றன. அவற்றுள் எட்டுத்தொகை நூல்களில் உள்ள மருத்துவம் தற்கால மருத்துவத்திற்கு முன்னோடியாக விளங்குவதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**நற்றிணையில் மருத்துவம்**

*எட்டுத்தொகையில் முதலிடம் பிடித்த நற்றிணையில் நோய்க்குத் தகுந்த மருந்தினைக் கொடுப்பவனுக்கு 'அறவோன்' என்று பெயர் இருந்ததைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.*

***'அருப்பிணி உறுநர்க்கு வேட்பது கொடாஅது***
***மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்'***
***- (நற்.பா.126).***

*என்ற பாடல் வரிகளை ஆராயும் போது நோயுற்றவர்க்க விரும்பியதைக் கொடுக்காமல் நோய்க்கு தகுந்த மருந்தினை ஆராய்ந்து பார்த்து கொடுப்பவரை 'அறவோன்' என்று குறிப்பிட்டிருப்பதை அறிய முடிகிறது. மேலும்,*

***'அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து'***
***(நற்.பா.140)***

*என்ற இவ்வரிகளில் நோயாளியின் துன்பத்தையும் வேதனையையும் துடைப்பது மருந்து என்பதை அறியம் வகையில் அமைகிறது. இக்கருத்தையெ,*

***'அருந்துயர் ஆரநர் தீர்க்கும் மருந்து' - (கலி.20)***

*என்ற வரியில் கலித்தொகையில் குறிஞ்சிதிணை பாடிய கபிலரும் பாடியுள்ளார் என்பதால் சங்ககாலத்தில் மருத்துவம் இருந்ததற்கு இதுவும் சான்றாய் அமைகிறது.*

*நோய் தீர்ப்பவருக்கு அறவான் என்ற பெயர் இருந்ததை நற்றிணை மட்டும் அல்லாமல்*

***அல்லல் ஒருவர்க்கு அடைந்தக்கால் மற்றவர்க்கு***
***நல்ல கிளைகள் எனப்படுவார் - நல்ல***
***வினைமரபின் மற்றதனை நீக்கு மதுவே***
***மனைமரம் ஆய மருந்து!***

*என்ற பழமொழி நானூறு பாடல் வரிகளிலும் அறியமுடிகிறது.*

**குறுந்தொகையில் மருத்துவம்**

*நல்ல என்ற அடைமொழி பெற்ற குறுந்தொகை மருத்துவம் சார்ந்த பாடல்கள் நிறைய*

காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று.

**'பசும்புளி வேட்கை கருஞ்சூல் மகளிர்'**

**- (குறு.287)**

என்ற இவ்வரியை ஆராயும்போது பெண்கள் கர்ப்பக்காலத்தில் ஏற்படும் வாந்தியெடுக்கும் உணர்வை புளியங்காய் சாப்பிட்டால் சரியாகவிடும் என்பதை உணர்த்துகிறது. மேலும் குறுந்தொகை 71, 136வது பாடல்களில் மனநல மருத்துவம் பற்றிய வரிகள் காணப்படுகின்றன.

## ஐங்குறுநூறு கூறும் மருத்துவம்

குறுந்தொகையில் கண்ட புளியங்காய் மருத்துவத்தை,

**'புளியங்காய் வேட்கை தந்து மலர்ந்த**
**இவல் வயா நோய்க்கே' - (ஐங்குறு.51)**

என்ற ஐங்குறுநூறு பாடல் வரிகளிலும் காணமுடிகிறது.

## பதிற்றுப்பத்தில் மருத்துவம்

புறம் சார்ந்த பதிற்றுப்பத்தில் அறுவைச் சிகிச்சை முறை இருந்ததை,

**'மீன் கொட்டின் பனிக்கயம் மூழ்கிச்**
**சிரல் பெயர்ந்தனை நெடுவள் ஊசி**
**நெடுவசி பரந்த உடுவாழ்**
**மார்பின் அம்புசேர் உடம்பினர்' - (பதிற்று.42)**

என்ற இப்பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. போரிலே புண்பட்ட வீரர்களின் உடலானது ஊசி கொண்டு தைக்கப்பட்டதாகப் பதிற்றுப்பத்து பறைசாற்கின்றது.[2]

## கலித்தொகையில் மருத்துவம்

மனிதனின் துன்பங்களையும் நோய்களையும் தீர்ப்பது மருந்து என்பதற்கு,

**'அருந்துயர் ஆரஞர் தீர்க்கும் மருந்து'**

**(கலி.குறி.20)**

**'இன்னுயிர் செய்யும் மருந்து' - (கலி.பாலை.21)**

என்ற கலித்தொகை வரிகள் சாட்சியாக அமைகின்றன.

**'திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய**
**மருந்து போல் மருந்தாகி மனன் உவப்ப'**

**- (கலி.பாலை.16)**

இவ்வரிகளில் நன்கு பாதுகாக்கப்பட்ட உடம்பினை நோயாளி கொண்டிருந்தால் மருத்துவர் தரும் மருந்து நோயாளியில் பாதிக்கப்பட்ட உறுப்பினை விரைவாகச் சென்றடைந்து நன்கு வேலை செய்யும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதன் ஒருவனுக்கு நோயைக் குணப்படுத்துமாறு நோயாளி வேண்டிக் கொண்டப்பின்பும் மருத்துவன் மருந்து கொடுக்காவி'ட்டால் அது கொடுமை சாடுகின்றது[3] இதனை,

**'திறனறி ஒருவன்**
**மருந்து துறைகோடலின் கொடிதே'**

**- (கலி.நெய்தல்.12)**

என்ற வரிகள் குறிப்பிடுகிறது. ஆகவே மனிதன் எந்த அளவிற்கு தன்னை பாதுகாத்து வந்தான் என்ற கருத்தை கலித்தொகை வாயிலாக உணரமுடிகிறது. மேலும்,

**'பிறர்நோயும் தம்நோய் போல் போற்றி அறந் அறிதல்**
**சான்றவர்க்கு எல்லாம் கடன்' - (கலி.22)**

என்ற வரிகளை ஆராயுங்கால் நோயாளிக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர் தன்னையும் ஒரு நோயாளியாக பாவித்து சிகிச்சையளிக்க வேண்டும் என்பதை விளக்குகின்றது.

## புறநானூற்றில் மருத்துவம்

'உணவே மருந்து' என்பது ஆன்றோர் பழமொழி. உணவு கொடுத்து வந்தாரை உபசரிக்கும் வழக்கம் தமிழகத்தில் இருந்தது என்பதை,

**'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'**

**- (புறம்)**

என்று புறநானூறும், இதே கருத்தையே பிற்காலத்தில்

**உண்டி கொடுத்தோர உயிர் கொடுத்தோரே'**

என்ற மணிமேகலையும், உணவின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

**'நீலமணி மிடற்று ஒருவன் போல**
**மன்றனு பெருமே நீயே தொன்னிலை**
**பெருமடில விடரகத்து அருமிசை கொண்ட**
**சிறியிலை நெல்லி தீங்கனி குறியாது' - (புறம்.91)**

மேற்கண்ட பாடலை ஆராயும் போது வேட்டைக்குச் சென்ற அதியமான் மன்னனிடம்

*பன்னிரண்டு ஆண்டிற்கு ஒருமுறை காய்க்கும் நெல்லிக்கியைப் பறித்துக் கொண்டு வந்து ஔவையாருக்கு கொடுத்தான். தன்னுடைய இறப்பைக்கூட கருதாமல் நீண்டகாலம் வாழ்வாயாக என்றுரைத்தச் செய்தியை இந்நூல் வலியுறுத்துகிறது*

***'வயவுறு மகளிர் வேட்டுநின் அல்லாது***
***பகைவர் உண்ணா அருமன்னினையே'***

***- (புறம்.ப.20)***

*இப்பாடலில் சேரமன்னன் மாந்திரஞ்சேரல் இரும்பொறையைப் புகழ்ந்து பாடும் பொருட்டு குறுங்கோழியூர்கிழார் என்ற புலவர் அவருடைய நாட்டில் வயா நோயினால் துன்புற்ற கர்ப்பினிப் பெண்களன்றி அவரது எதிரிகளின் நாட்டைச்சார்ந்த எவரும் அவரது நாட்டின் மண்ணை உண்பதில்லை[5] என்று அவரது நாட்டின் பெருமையை கூறும் போது கர்ப்பிணி பெண்கள் மண் உண்ட செய்தியை அறிய முடிகிறது.*

**முடிவுரை**

*மனிதன் தோன்றிய நாளிலிருந்து நோய்கள் காணப்படுகின்றன. அதை அப்போதே அவர்கள் அதனை தீர்க்கும் மருந்தினையும் உணவிலேயே கண்டறிந்தனர் என்பதால், சித்த மருத்துவர்களின் முன்னோடி சங்ககால மக்கள் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.*

**சான்றெண் விளக்கம்**

1. *புலியூர்கேசிகன், பழமொழிநானூறு. பா.எ.54*
2. *வளர்மதி, எட்டுத்தொகையில் மருத்துவம், முத்துகலம் இணைய இதழ்,* ISSN & 2404 & 1996.
3. *சேகர். லூ எட்டுத்தொகை கலித்தொகையில் மருத்துவத் தொழில், தொழிலாளர் குறித்த பதிவுகள், ப.எண்.105, புலியூர்கேசிகன், மணிமேகலை, ப.31.*
4. *வளர்மதி, எட்டுத்தொகையில் மருத்துவம், ப.125.*

**துணை நூற்பட்டியல்**

1. *சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும், தெளிவுரையும் தொகுதி (1,2,3) மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, பதிப்பு - 2010.*
2. *சேகர் ஞா, எட்டுத்தொகை கலித்தொகையில் மருத்துவத்தொழில், தொழிலாளர்கள் குறித்த பதிவுகள், தூய வளனார் தன்னாட்சி கல்லூரி, திருச்சி, பதிப்பு - 2022.*
3. *புலியூர்கேசிகன், பழமொழி நானூறு கௌராபுத்தக மையம், 4, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு, சென்னை, பதிப்பு-2010.*
4. *புலியூர்கேசிகன், மணிமேகலை, சாரதா புத்தக மையம், சென்னை.*